செ.வெ.எண். 37/ஜூன்                                                    தேதி : 17.06.2016

**தருமபுரி வட்டம், கோணங்கிநாயக்கனஅள்ளியில் நடைபெற்ற அம்மா திட்ட சிறப்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடத்தில் மனுக்களை பெற்றார்.**




தருமபுரி வட்டம், கோணங்கிநாயக்கனஅள்ளியில் இன்று (17.06.2016) நடைபெற்ற அம்மா திட்ட சிறப்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடத்தில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களைப் பெற்று மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் செய்து 7 பயனாளிகளுக்கு குடும்ப அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து கோணங்கிநாயக்கனஅள்ளி பகுதியில் அமைந்துள்ள பொதுமக்களின் வீட்டிற்கு சென்று குடும்ப அட்டையை பார்வையிட்டு நியாய விலைக்கடைகளின் மூலம் வாங்கிய அரிசியின் தரத்தை சோதித்தறிந்தார். பின்னர் மதிகோண்பாளையம் நியாய விலைக்கடையை திடீர் ஆய்வு மேற்கொண்டு இருப்பு விவரங்களையும், பதிவேடுகளையும், மக்களுக்கு வழங்கப்படும் உணவு பொருட்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் தருமபுரி வட்டாட்சியர் திருமதி. பாரதி, கோணங்கிநாயக்கனஅள்ளி ஊராட்சிமன்ற தலைவர் திருமதி. மல்லிகா கிருஷ்ணன், தனி வட்டாட்சியர் திரு. கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. சின்னதம்பி, திரு. ரவிச்சந்திரன், துணை வட்டாட்சியர் திரு. சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.